**https://arimanokku.com/** UGC-CARE LISTED AND PEER REVIEWED JOURNAL
**ISSN: 2320-4842 (Print)** **ISSN: 3049-2688 (Online)**

ARIMA NOKKU ISSN: 2320 - 4842

19-2 April 2025

Published on 14, April-2025 ISSN: 3049-2688 (Online)

# சி. வை. தா. வின் நல்லந்துவனார் கலித்தொகைப் பதிப்புரையின் நோக்கும் போக்கும்

**முனைவர் இரா. ஜானகி**
உதவிப்பேராசிரியர்
தமிழ்த்துறை, வடபழனி வளாகம்
எஸ். ஆர். எம். அறிவியல் மற்றும் தொழில் நுட்பக் கல்வி நிறுவனம்

**ஆய்வுச்சுருக்கம்:** *1854இல் குமரகுருபரர் இயற்றிய நீதி நெறி விளக்கத்தை* CL.W. Kingsbury *என்ற பெயரில் பதிப்புரை இல்லாமல் பதிப்பித்த தன்மையில், பதிப்புப் பணியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்ட சி. வை. தாமோதரம் பிள்ளை அவர்கள் தொடர்ந்து 46 ஆண்டுகள் பல அரிய நூல்களை முதல் பதிப்பாக பதிப்பித்தும் பல நூல்களை இயற்றியும் உள்ளார். சி.வை.தா. பதிப்பித்த நூல்களில் இடம்பெற்றுள்ள பதிப்புரைகள் ஆராய்ச்சித் தன்மையுடையவை, கருத்தியல் தொடர்புடையவை, நூலாக்க முயற்சியில் பதிப்பாளர்களின் சிந்தனைகளை அனுபவங்களை நேர்மையோடு முன்வைப்பவை.*

**கருவிச்சொற்கள்:** *சி. வை. தா. வின் பதிப்புப் பணி – கலித்தொகை – முதல் சங்க இலக்கிய பதிப்புரையின் நோக்கும் போக்கும்.*

**முன்னுரை:** *தமிழ் மொழியின் வளர்ச்சியை ஆறுமுக நாவலரின் வழி பணியாற்ற விரும்பிய சி. வை. தா. அவர்கள் பதிப்புப்பணியில் தன்கென தனி அடையாளத்தை உருவாக்கியவர். முன்னோர்போல சமய நூல்களை, பாட நூல்களை பதிப்பிக்காமல் மூடநம்பிக்கையாலும் இயற்கையாலும் அழிந்துப்போகாமல் மறையும் நிலையில் இருந்த பழந்தமிழ் இலக்கண நூல்களையும் சமய நூல்களையும் பதிப்பித்துள்ளார். பழந்தமிழ் இலக்கிய நூலாக சி.வை.தா. முதன்முதலில் பதிப்பித்தது கலித்தொகை நூலாகும். 1887இல் தான் பதிப்பித்த கலித்தொகைப் பதிப்பில் மிக விரிவானதொரு பதிப்புரை எழுதியுள்ளார். சி. வை. தா. வின் பதிப்புரை வெறும் பதிப்பு சார்ந்த செய்திகளை மட்டும் பேசவில்லை. சி.வை.தா. வின் தேசப்பற்றையும் மொழிப்பற்றையும் பதிப்புரை முன்வைத்தப்பிறகே பதிப்பின் நோக்கம், பதிப்புப்பணியின் சிக்கல் அதன் அவசியம் குறித்தெல்லாம் உரைக்கின்றது. எனவே சி. வை. தா. வின் கலித்தொகைப் பதிப்புரை வழி அவரின் சமகாலச்சிந்தனையை, பதிப்பியலின் செயல் பாட்டை வாசகர்களுக்கு உணர்த்தும் வகையில் விவாதித்துள்ள செய்திகளை எடுத்தியம்பும் தன்மையில் இக்கட்டுரை அமைக்கப்பட்டுள்ளது.*

### சி.வை. தாமோதரம்பிள்ளை பதிப்பித்த நூல்கள்

*1854 - குமரகுருபரர் இயற்றிய நீதி நெறி விளக்கம்.*

*1868 - தொல்காப்பியம் சொல்லதிகாரம் சேனாவரையர் உரையுடன் (பதிப்புரை இல்லை).*

*1881 - பொன்பற்றிகாவலன் புத்தமித்திரனார் இயற்றிய வீரசோழியம்.*

*வீரசோழியப் பதிப்புரை தெய்வாசாரிய வணக்கம், சரஸ்வதி வணக்கம், தமிழாசிரிய வணக்கம், அவையடக்கம் என்பதனோடு தொடங்கப்பட்டுள்ளது. இந்தியாவிற்கு ஆதிபாஷை*

தமிழ், தமிழ் தற்பாஷை, தமிழ் திராவிடமாயதூஉந் திராவிடந் தமிழாயதூஉம் இரண்டுந் தவறென்றுணர்க என்றும் கூறியுள்ளார். மற்றும் நூல் பற்றிய சில குறிப்புகள், பிரதிகளின் நிலை, பதிப்பிற்கு பயன்பட்ட பிரதிகள் முதலியன குறித்தும் பேசியுள்ளார். மேலும் வீரசோழியம் அச்சிடுவதற்கான நோக்கம் பற்றி கூறுகையில் *"அழிந்திறந்து போன நூல்களுட்டானு மொன்றாகி இன்னும் சில காலத்தில் மருந்துக்கும் அகப்படாமற் போய்விடுமென்றஞ்சி, அதன் பாலியயவ்வன சொரூபங் கிட்டாதாயினுங் கிடைத்த வரைக்கும் அதனைக் காப்பாற்றுதலே இதனை இப்போது அச்சிடுவித்த நோக்கமென்று ணர்க."* என்ற ஆதங்கத்தில் தான் முயன்றதை தன் பதிப்புரையில் பதிவு செய்துள்ளார்.

1883 கச்சியப்ப முனிவர் இயற்றிய தணிகைப் புராணத்தைப் பதிப்புரை இல்லாமலும் இறையனாரகப் பொருளை பரிசோதித்து பதிப்பித்துள்ளமை (இரண்டு பதிப்பிலும் பதிப்புரை இடம்பெறவில்லை.)

1885 தொல்காப்பியம் பொருளதிகாரம் நச்சினார்க்கினியார் உரையுடன். தொல் காப் பியப் பதிப்புரையில் முன் பதிப்பித்த பதிப்புகளின் பதிப்புரையில் கூறியுள்ள சில செய்திகள் குறித்த பதிவுகளும் எடுத்துக்கூறப் பட்டுள்ளன. குறிப்பாக வீரசோழியப் பதிப்புரையில் விவாதித்த கால விவரணம் பற்றிய குறிப்பு தரப்பட்டுள்ளது.இறையனார் களவியலுரைப் பாயிரத்தில் வரும் பொருளி லக்கணம் தோன்றியதற்கான கதைக்குறிப்பு எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. மேலும் சிரத்தை யோடு தான் மேற்கொண்ட பதிப்பு முயற்சியை குறைகூறுபவர்களுக்கு சி. வை. தா. அவர்கள் தன் தொல்காப்பியப் பதிப்புரை யில் சவால் விடுத்துள்ளதையும் காண முடிகின்றது.

*குறைகூற இஷ்டமுள்ளவர்கள் இன்னும் அச்சிலே தோற்றாதனவாய் அடியேன் காட்டுங் கிரந்தங்களில் இரண்டொரு ஏட்டை யாயினும் எழுத்துப்பிழையற மாத்திரம் வாசித்துக்காட்டுவாராயின் அவர்கள் பாதாம் புயத்தை உச்சிமேற்சூடி அவர் கட்குத் தொண்டு பூண்டொழுகுவேனென்று அறிவாராக.* (சி.வை.தா.1885.ப.128)

* 1887-நல்லந்துவனார் கலித்தொகை (பதிப்புரை உண்டு)
* 1889-வைத்தியநாத தேசிகர் இயற்றிய இலக்கணவிளக்கம் மூலமும் உரையும் - தோலாமொழித்தேவர் இயற்றிய சூளாமணி (இரண்டிலும் பதிப்புரை உண்டு)
* 1891-தொல்காப்பியம் எழுத்ததிகாரம். நச்சினார்க்கினியாருரையுடன் (பதிப்புரை உண்டு)
* 1892–தொல்காப்பியம், சொல்லதிகாரம். நச்சினார்க்கினியாருரையுடன் (நன்றி கூறல் காணப்படுகிறது, பதிப்புரை இல்லை)
* 1900-இலக்கண விளக்கம், செய்யுளியல் (பதிப்புரை உண்டு)

## நல்லந்துனார் கலித்தொகை

கலித்தொகையின் முதற்பதிப்பு 1887ஆம் ஆண்டில் வெளிவந்துள்ளது. இதனைச் சுவடியிலிருந்து ஆய்ந்து வெளியிட்டவர் யாழ்ப்பாணம் சி. வை. தாமோதரம்பிள்ளை. இவ்வெளியீடு மதுரை பாரதத்துவாசி நச்சினார்கினியார் உரையுடன் கௌரவ அ. சேஷையசாந்திரிகள் அவர்களின் திரவியத் தைக் கொண்டு பதிப்பிக்கப் பட்டுள்ளது.

## நல்லந்துவனார் கலித்தொகைப் பதிப்புரை வழி அறிய வருவன

சி. வை. தாமோதரனார் தாம் பதிப்பித்த நூல்களின் பதிப்புரைகளில் சில ஆய்வுகளை மேற்கொண்டுள்ளார். தமிழ் குறித்த சொல்லாய்வு, பதினென்கீழ்க்கணக்கு குறித்த ஆய்வு, இலக்கிய வரலாற்று ஆய்வு போன்றன குறிப்பிடத்தக்கன. சி. வை. தா. அவர்கள் தாம் முதன்முதலில் பதிப்பித்த நல்லந்துவனார் கலித்தொகைப் பதிப்புரை யில் வீரசோழியப் பதிப்புரையின்வழி தமிழ் மொழி குறித்து அறிஞர்கள் செய்த விவாதங்களுக்கு வேறு வகைகளில் அறிஞர்கள் கடுமையாக விமர்சித்த கருத்துகளுக்கு மறுப்புரை வழங் கும் முறையில் விரிவான தொரு விளக்கம் அளித்துள்ளார். இதன்வழி சி. வை. தா. அவர்களின் பதிப்புரைகளில் ஒரு கருத்துத் தொடர்ச்சியை காண முடிகின்றது என்பது வெளிப்படை.

*1. தமிழே நாவலந்தீவின் பழமையான மொழி என்றும் தமிழில் வடமொழிச் சொற்கள் கலந்திருப்பது கொண்டு அது முந்தைய மொழி என்று கருதுதல் கூடாது என்றும் தமிழ் – திராவிடம் – வடமொழி குறித்த தன் கருத்துக்களை சான்றுகளுடன் பதிப்புரையில் விவாதித்தல்.*

*2. சுதேசமித்திரன் வாயிலாக வெளிக்காட்டப் பட்ட தான் கூறாத கருத்திற்கு பதிலுரைத்தல்.*

*3. சி.வை.தா. அவர்கள் பதிப்பு குறித்து சிந்தித்ததிற்கான காரணத்தை பதிப்புரையின் அடிக்குறிப்பின் வழி அறிய முடிகின்றது.*

*'தமிழ் நூல்களுக்கு வந்த விதியையும் கையெழுத்துப் பிரதிகளின் கதியையும் அவை அடைந்திருக்கும் ஸ்நிதியையும் பார்த்துச் சகிக்கமாட்டாமை யொன்றே என்னை இத்தொழில்களில் வலிப்பது'. (சி.வை.தா., 1887, ப.8)*

*4. தமிழுக்கு காலாந்தரத்தில் ஏற்பட்ட இரண்டு பேரிடையூறுகள் மற்றும் மூன்று பூதங்கள் குறித்தும் சி. வை. தா. அவர்கள் பேசியுள்ளார். தமிழ்ச்சங்கத்திற்கு ஆலயமாய்ச் சர்வ தமிழ்க் கிரந்த மண்டபமாயிருந்த கபாடபுரம் வருண பகவானுக்கு ஆசனமா கியது, மத வைராக்கியத்தால், நூற்சாலைகள் அனைத்தும் நீறாக அக்கினி பகவானுக்குத் தந்தந் செய்தமை,'செல்துளைத்த புள்ளியன்றி மெய்ப்புள்ளி விரவாத சென்னானேட்டிற் – பல்துளைத்து வண்டு மண லுழுத வரியெழுத்து" உடையவாய்ச் செல்லினால் அரிக்கப்பட்டும் பாணங்களாற் துளைக்கப் பெற்றும் மூன்றாவது பூதமான மண்ணின் வாய்ப்பட்டன மிஞ்சிய ஏடுகள்.*

*5. நீர், நெருப்பு, மண் முதலியவைகளால் அழியாது மீதம் எஞ்சிய ஏடுகள் இருந்த தன்மை பற்றியும் சுட்டிக்காட்டியிருத்தல்.*

*'ஏடு எடுக்கும்போது ஓரஞ் சொரிகிறது, கட்டு அவிழ்க்கும் போது இதழ் முரிகிறது; ஒற்றை புரட்டும்போது துண்டு துண்டாய்ப் பறக்கிறது. இனி எழுத்துக்களோ வென்றால் வாலுந்*

*தலையுமின்றி நாலுபுறமும் பாணக் கலப்பை மறுத்து மறுத்து உழுது கிடக்கின் றது.' (சி.வை.தா., 1887, ப.12)*

*6. நூலை பதிப்பித்தலில் தம் நோக்கம் யாது? பிற பதிப்பாசிரியர்களின் நோக்கம் யாது? என்பதை தெளிவாக சுட்டிக்காட்டியிருத்தல். பிற பதிப்பாசிரியர்கள்*

- பொருள் வரவையே கருதி விரைவில் விலைபோகும் விநோத நூல்களை அச்சிடுதல்
- பள்ளிக்கூடங்களுக்கு உபயோகமான பாட புத்தகங்களை அச்சிடுதல்
- சர்வகலாசாலையால் பற்பல பரீட்சை களுக்கு ஏற்படுத்தப்பட்ட போதனா பாகங் களை அச்சிடுதல்

என்பதையே தம் கருத்தில் கொண்டனர் என்பதை தெளிவாக தன் பதிப்புரையில் சி.வை.தா. சுட்டிக்காட்டியுள்ளார்.

*சரஸ்வதியின் திருநடனஞ் சொலிக்கப் பெற்றனவாகிய சங்க மரீஇய நூல்கள் சிதைந்தழியவும் அவைகளில் அவர்களுக்குச் சற்றேனுந் திருட்டி சென்றலது. இதனைக் கண்டு சகிக்கலாற்றாது மனநொந்து அழிந்து போகுஞ் சுவடிகளை இயன்றமட்டுந் தேடி, அவற்றுட் தமிழிற்குப் பேரிலக்கணமாகிய தொல்காப்பியம் சொல்லதிகாரஞ் சேனா வரையம், அதன் பொருளதிகாரம் நச்சினார் க்கினியம், வீரசோழியம், இறையனாரகப் பொருள், திருத்தணிகைப் புராணமென்று இன்னவற்றைப் பல தேசப்பிரதிகள் கொண்டு பரிசோதித்து அச்சிடுவித்தேன். இதனால் எனக்குப் பிரதிகள் விலைபோகா மல் மூவாயிரத்தைஞ்ஞூறு ரூபாவரையிற் திரவிய நஷ்டம் நேரிட்டது.' (சி.வை.தா., 1887, பக்.12-13)*

7. கலித்தொகை நூலை பதிப்பிக்க நன்கொடை வேண்டி 'ஹிந்து' பத்திர வாயிலாக ஓர் அபயம் எழுதியதை குறிப்பிட்டுள்ளமை, பதிப்பிற்கு பொருளுதவி செய்தோர், பதிப்பி ற்கு கொடுத்து உதவிய தொகையின் விவரத்தை பதிப்புரையில் குறிப்பிட்டுள் ளமை, 'கடைச் சங்கத்தார் அருளியன எட்டுத்தொகை பத்துப்பாடல் பதினெண் கீழ்க்கனக்கென்று மூவகைய' என்று சொல்வதோடு அவை இன்னன என்பதைக் குறிக்கும் செய்யுட்களை எடுத்துக்காட்டி யிருத்தல், கலித்தொகைப் பிரதிகள் தேட தான் மேற்கொண்ட முயற்சிகள் மற்றும் இப்பதிப்பில் சிற்சில இடங்களில் தான்

செய்துள்ள மாற்றங்கள் இவையிவை என்பதை தெளிவுபட சுட்டிக்காட்டியுள் ளமை, பதிப்புரையில் எண்கள் தமிழிலும் தேவைப்படும் கூடுதல் தகவல்களை அடிக் குறிப்பிலும் குறிப்பிடப்பட்டுள்ளமை, எட்டுத் தொகையில் கலித்தொகை – நல்லந்துவனார் – நச்சர் உரையின் சிறப்பு முதலியன குறித்து பேசுதல் மற்றும் பரிசோதனாசிரியர் படும் கஷ்டம் இன்னதென்றும் மறவாமல் தம் பதிப்புரையில் சி.வை.தா. அவர்கள் சுட்டிக் காட்டியுள்ளார்.

'இலக்கணக் கொத்துடையார்' நூலாசிரியர் உரையாசிரியர் போதகாசிரியரென வகுத்த மூவகை ஆசிரியரோடு யான் பரிசோதனாசி ரியரென இன்னுமொன்று கூட்டி, இவர் தொழில் முன்வேர் தொழிலினும் பார்க்க மிகக் கூடியதென்றும் அவர் அறிவுமுழுவதும் இவர்க்கு வேண்டியதென்றும் வற்புறுத்திச் சொல்கின்றேன். (சி.வை.தா., 1887, ப.26)

மேலும், முக்கியமாகத் தமிழறிஞர்கள் செய்ய வேண்டிய பணி குறித்தும் தமிழபிமானி களுக்குச் சுட்டிக்காட்டியதுடன் அது குறித்து தயைகூர்ந்து சிந்திக்கவும் கட்டளையிட்டு ள்ளார்.

சங்கமரீஇய நூல்களாய் வகுக்கப்பட்ட எட்டுத்தொகை பத்துப்பாடல் பதினெண் கீழ்க்கணக்குட் தலைமைபெற்ற எட்டுத் தொகைகளில் இக்கலித்தொகையும், பத்துப் பாடலுட் திருமுருகாற்றுப்படையுமே இப்பொழுது அச்சில் வந்தன. எஞ்சிய பதினாறனையும் பெயர் மாத்திரையானே அறிந்தாற் போதுமா? பதினெண்கீழ்க் கணக்குட்டானும் இன்னும் வெளிவராது கிடப்பன உள. (சி. வை. தா., 1887, ப.33)

மேலும், பழைய சுவடிகள் யாவும் அழிந்து போகின்றன. புது ஏடுகள் சேர்த்து எழுதி வைப்பாரும் இலர். காலத்தின் வாய்ப்பட்ட ஏடுகளைப் பின் தேடி எடுப்பினும் கம்பை யும் நாராசமுந்தான் மீரும் என்பதையும் உதாரணமாகத் தன் காலத்தில் தான் பார்த்த ஐங்குறுநூறு தற்பொழுது தேசங்கள் தோறும் எங்குதேடியும் அகப்படாத தகவலை யும் குறிப்பிட்டுள்ளார். குறிப்பாக சி.வை.தா அவர்களின் முன்னோடி சங்க இலக்கியப் பதிப்பான நல்லந்துவனார் கலித்தொகைப் பதிப்புரையில் சுவைமிகு சுவாரசியமான தொடர்கள் இடம்பெற்றுள்ளன.

'தூக்கினாலன்றோ தெரியுந் தலைச்சுமை?', 'சட்டி சுட்டதென்று நெருப்பிற் பாய்ந்த கள்வனார்போல', 'உள்ளங்கை நெல்லிக்கனி போல', 'சந்திரனுக்குக் களங்கடுஞ் சூரியனுக் குப் பன்முரிவும்போல', 'யானை வாய்ப் பட்ட விளம்பழத்தைப் பின் இலண்டத்துள் எடுத்துமென்? ஓடன்றோ கிட்டுவது!", 'அரைக் காசுக் கழிந்த கற்பு ஆயிரம் பொன் கொடுத்தாலும் வாரது, யானை தன் தலைமேல் மண்ணை வாரிப் போட்டுக் கொள்வதுபோல், பிறவிக் குருடன் சூரிய சந்திரருண்மையை மறுத்த தொக்கும் என்பன போன்றவற்றை சி. வை. தா. அவர்களின் பதிப்புரையின் வழி அறிய முடிவதால் அவரின் மொழி கவிநயம் நிறைந்தது மற்றும் கருத்தாக்கம் மிகுந்தது என்பதையும் அறிய முடிகின்றது.

## பார்வை நூல்கள்

1. இளங்குமரனார். இரா., தமிழ் வளர்த்த தாமோதரனார், மீள்பதிப்பு, 2022, தமிழ்மண் பதிப்பகம், சென்னை.

2. தாமோதரம் பிள்ளை, சி. வை. தாமோதரம் பிள்ளை எழுதிய (பதிப்புரை களின் தொகுப்பு), தாமோதரம், 1971, யாழ்ப்பாணம், கூட்டுறவுத் தமிழ் நூற்பதிப்பு, விற்பனைக் கழகம், யாழ்ப்பாணம்.

3. சரவணன், ப. (பதிப்பாசிரியர்), தாமோதரம் (சி.வை.தா. பதிப்புரைகள்) 2017, காலச்சுவடு.

4. தாமரைக்கண்ணன், ப. (ஒப்பீட்டில் உதவி யவர்) பதிப்புச் செம்மல் சி.வை. தாமோதரம் பிள்ளை பதிப்புரைகளின் தொகுப்பு தாமோ தரம், முதல் பதிப்பு:1931 (மறுபதிப்பு) 2004, குமரன் பப்ளிஷர்ஸ்

5. ஜானகி, இரா.(தொ.), சங்க இலக்கியப் பதிப்புரைகள், 2010, பாரதி புத்தகாலயம்.

6. பெருமாள் முருகன், பதிப்புகள் மறுபதிப்பு கள், நான்காம் பதிப்பு, 2022, காலச்சுவடு பதிப்பகம்.

7. வெங்கடேசன், இரா. தமிழ்ப் பதிப்பு வரலாற்றில் செவ்விலக்கிய நூல்கள், 2011, இராசகுணா பதிப்பகம்.